# ஹொரவப்பத்தான பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 10 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 யூலை 22 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஹொரவப்பத்தான பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|
| | | வருமானம் | செலவுகள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| நிதிக்கூற்றுகளில் விடுபாடுகள் | 01 | - | - | கணிப்பீடு செய்யப்பட வில்லை | - |
| - மேற்படி - | 08 | - | - | 1,414 | - |
| நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 02 | - | 336 | - | - |
| நிதிக்கூற்றுகளில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 01 | - | - | 124 | - |
| - மேற்படி - | 01 | - | - | - | 217 |
| - மேற்படி - | 01 | - | 34 | - | - |

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,908,209 ஆக இருந்ததுடன், பட்டோலைகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 30,019,710 ஆக இருந்தது.

### 1.3.4 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 106,788 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை

#### தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 129,600 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.6 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மனங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவை** | |
| (i) 163 | வருடத்தின் வருமானத்தைக் கணிப்பீடு செய்வதற்கான பொழிப்பு வருமானப் பதிவேடு (பி.ச 19) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 180 | செயலாளரினால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரின் நிதிப் பிரமாணம்** | |
| (i) நி.பி 104 | பிரதேச சபைக்குச் சொந்தமான 252-6536 ஆம் இலக்க கெப் வாகனம் விபத்துக்குள்ளாகியதை பழுது பார்த்தலுக்காக ரூபா 201,346 ஆனது செலவு செய்யப்பட்டிருந்தும் அதற்குரிய தொடக்க அறிக்கை மற்றும் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 756 | மீளாய்வாண்டினுள் பிரதேச சபையின் பொருட்கள் தொடர்பான சரி பிழை பார்த்தல்களுக்கான மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி 1645(அ) | சபையின் 252-6536 ஆம் இலக்க கெப் வாகனத்தின் பழுதுபார்த்தல் மற்றும் டயர் மாற்றுவதற்காக மீளாய்வாண்டினுள் ரூபா |

767,809 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செலவுகள் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| **(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | |
| VII ஆம் அத்தியாயத்தின் 13.7 ஆம் பிரிவு | முறையான நியமனக் கடிதமொன்று இல்லாமல் சபைச் செயலாளருக்கு மாதாந்தம் ரூபா 4,287 படி 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 51,450 ஆன பதில் கடமைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 71,186 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 777,041 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ளவா றான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 187 | 126 | 275 | 184 | 285 | 256 |
| (ஆ) | வாடகை | 2,373 | 1,739 | 2,169 | 2,230 | 1,683 | 1,842 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 650 | 453 | 1,035 | 640 | 452 | 1,041 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 2,721 | 828 | 838 | 3,402 | 1,183 | 1,552 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றில் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 251,732 தண்டப்பணத் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணங்களாக ரூபா 300,000 தொகை கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.4 கடைகளுக்கான வாடகை

(i) மீளாய்வாண்டில் ரூபா 460,800 இற்கு பட்டியலிடப்பட்டிருந்த கடைகளுக்கான வாடகை வருமானத்தில் ரூபா 316,300 அறவிடப்படாமல் இருந்ததுடன், 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 797,055 தொகையான நிலுவையில் எவ்வித பணமும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்க வில்லை.

(ii) சபைக்குச் சொந்தமான 21 கடைகள் இருந்ததுடன் அதில் 13 கடைகளில் 2007 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித வாடகையும் அறவிடப்படாதிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. வாடகைக்குவிடும் போது முறையான ஒப்பந்தங்களுக்கு உடன்பட்டிராமையே இதற்கான காரணமாக இருந்ததுடன் இக் கடைகளைத் திரும்ப வாடகைக்கு விடுவதற்கான

நடவடிக்கைகள் எடுக்கப்படாமையின் காரணமாக சபை நிதியத்திற்கு ரூபா 990,955 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 2.2.5 ஆதன வரி

17 வருடங்கள் பழமையான மதிப்பீட்டின் அடிப்படையில் பிரதேச சபையினால் ஆதனவரி அறவிடப்படுவதுடன் சொத்துக்களில் கணிசமான அளவில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தும் மீள சொத்துக்களை மதிப்பீடு செய்து ஆதனவரியை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின விடயம்** | **பாதீடு செய்யப்பட்டது** | **உள்ளவாறான** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டது** | **உள்ளவாறான** | **முரண்** |
| **மீண்டுவரும் செலவினம்** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| ஆளணி வேதனம் | 7,323 | 6,124 | 1,199 | 7,992 | 6,383 | 1,609 |
| ஏனையவை | 3,880 | 3,061 | 819 | 4,209 | 1,445 | 2,764 |
| உப மொத்தம் | 11,203 | 9,185 | 2,018 | 12,201 | 7,828 | 4,373 |
| மூலதனச் செலவினம் | 4,100 | 8,924 | (4,824) | 3,405 | 25,780 | (22,375) |
| மொத்தம் | 15,303 | 18,109 | (2,806) | 15,606 | 33,608 | (18,002) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

(அ) **அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி**

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (i) | பதவி நிலைத்தரங்கள் | 01 | - |
| (ii) | இரண்டாம் தரங்கள் | 04 | 07 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 10 | 14 |
| (iv) | வேறு (அமைய / தற்காலிக) | - | 04 |
| | மொத்தம் | 15 | 25 |

(ஆ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினரை விஞ்சி 10 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 2010 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 1,282,020 தொகை சபை நிதியத்திலிருந்து சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

வட மத்திய மாகாண பிரதம அமைச்சினால் அரிசி மாவுடன் அண்மித்த பேக்கரி உற்பத்திகளை பிரபல்யப்படுத்தும் செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் சபைக்கு ரூபா 613,500 பெறுமதியான பேக்கரி உற்பத்தி உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் கைத்தொழிலை ஸ்தாபிப்பதற்காக ரூபா 327,000 ஆன மேலதிக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையினால் அச்சகல சொத்துக்களும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 35,777,510 ஆக இருந்தது. 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 115,242 ஆக இருந்தது.

### 2.5.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 824,481 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு

மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 140,826 ஆக இருந்தது.

### 2.5.4 அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக அசைவுறாது காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 83,385 ஆக இருந்தது.

### 2.5.5 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீகப் பரிசோதனை / கணிப்பீட்டு சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,153,474 ஆக இருந்தது.

## 2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத செலவினங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒரு வருட காலத்தினுள் ரூபா 1,000 இனை விஞ்சி மேற்கொள்ளப்படுகின்ற நன்கொடைப் பணங்களுக்காக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 97,000 ஆன நன்கொடைகளுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 ஆவது பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 182 ஆவது பிரிவின் பிரகாரம் சபைக்கு கிடைக்க வேண்டிய ஏதாவது நிதியொன்றைக் கைவிடுவதற்காக சபை அங்கீகாரத்திற்கு மேலதிகமாக அமைச்சரின் அங்கீகாரமும் பெறப்பட வேண்டியிருந்தும் அவ்வாறான அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 39,180 ஆன வருமானம் ஏடுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபையினால் 2009 ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 5% ஆன நிறுத்தி வைத்தல் வரித் தொகை ரூபா 32,689 இனை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

## 2.8 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேச மக்களின் வசதிகள், நலன்புரி செயற்பாடுகள், சுகாதாரம், பாதைகள் மற்றும் பொது உபயோக சேவைகளுக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் ஆண்டுகளின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டமொன்றையும் அத்திட்டத்தை மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறை வேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3:12:2 ஆம் பந்தியின் பிரகாரம் விவசாய அமைப்புக்களுக்கு நிர்மாணங்களைச் செய்வதற்குரிய அதன் இயலுமான தன்மை பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் மாத்திரமே ஒப்பந்தங்களை வழங்க முடியுமாக இருந்தும் அவ்வாறான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது 05 சந்தர்ப்பங்களில் ரூபா 3,608,968 ஆன ஒப்பந்தங்கள் விவசாய அமைப்புக்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வேலை ஒப்பந்தங்களின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட திகதியில் பூர்த்திசெய்யாது தாமதமாகக் காணப்பட்ட சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அங்கீகாரமின்றியும் ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணங்கள் காட்டப்படாமலும் தலைவரின் விருப்பத்தின் பேரில் காலம் நீடிக்கப்பட்டமையினால் 05 வேலைகளுக்காக வேலைகளிலிருந்து கழிக்கப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 27,000 கழிக்கப்பட வேண்டிய சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டிருந்தது.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்